## Court of the District Munsif cum Judicial Magistrate No.I, Usilampatti.

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **OS.No.133/2013** | | |
| **PW/DW/CW** | : | **DW1** | | |
| **Name** | : **செல்வம்** | | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : **மாயத்தேவர்** | | **Calling** | : |
| **Village** | : போத்தம்பட்டி | | **Religion** | : |
| **Taluk** | : | | **Age** | : |

( Respondent present.)

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 03.07.2026

---

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

எனது தகப்பனாரான 27.02.1982ம் தேதிய பாகப்பிரிவினை பத்திரத்தில் எனக்கும், எனது தம்பிக்கும் கூட்டாக பிரித்த 3 ஏக்கர் 7 செண்ட் நிலத்தில் நான்குமால்கள் பிரிக்கப்பட்டு அதை நானும், எனது தம்பியும் கூட்டாக அனுபவித்து வந்தோம் என்றால் சரிதான். நானும், எனது தம்பியும் கூட்டாக அனுபவித்து வரும் 3 ஏக்கர் 7 செண்ட் நிலத்திற்கு கிழக்கே ராமன் இடமும், மேற்கே இளையபெருமாள்தேவர் இடமும், வடக்கே நாமகோடி இடமும், தெற்கே சசி இடமும் உள்ளது. எனக்கும், எனது தம்பிக்கும் ஒதுக்கப்பட்ட நிலத்திற்கு பாதை இல்லை என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்ட 1 ஏக்கர் 97 செண்ட் நிலத்தின் வழியாக தான் எங்கள் நிலத்திற்கு பாதை உள்ளது என்றால் சரிதான்.

27.02.1982ம் தேதிய பாகப்பிரிவினை பத்திரம் எழுதிய சமயத்தில் எனது தம்பி எமராஜாவிற்கு வயது 12 என்றால் தெரியவில்லை. பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்தப்பட்ட சமயத்தில் எனது தம்பி எமராஜா சிறுவயது என்பதால் எனது வீட்டில் தான் தங்கியிருந்தார் என்றால் சரிதான். எனது தம்பி எமராஜா திருமணத்திற்கு பின்னர் தான் தாவாச் சொத்தினை தனித்தனியாக விவசாயம் பார்த்து வந்தோம் என்றால் சரிதான். தாவாச் சொத்தில் உள்ள பொதுக்கிணறைத் தான் நாங்கள் இருவரும் பயன்படுத்தி வருகிறோம் என்றால் சரிதான். தாவாச் சொத்தினை நானும், எனது தம்பியும் வாய்மொழியாக எப்போது பிரித்துக்கொண்டோம் என்றால் எனது அப்பா தான்

பிரித்துக்கொடுத்தார். எனது கடந்த 1982ம் ஆண்டு பிரித்துக்கொடுத்தார். எனது அப்பா ஆளுக்கு சரியாக தலா 2-1/2 ஏக்கர் நிலம் பிரித்துக்கொடுத்தார். மேற்படி 27.02.1982ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் மேற்படி விபரம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாறு பாகப்பிரிவினை செய்யும் போது கிணறு யார் பக்கம் சென்றது என்றால் கிணறு பொதுவில் உள்ளது. எனது பாகத்திற்கு ஒதுக்கப்பட்ட நிலத்திற்கு நான்குமால் கிழக்கே நாமகோடி இடம், மேற்கே பிரின்ஸ் இடம், தெற்கே பால்ச்சாமி உழவு, வடக்கே எனது தம்பியின் உழவு உள்ளது. எனது தம்பியின் நிலத்திற்கு நான்குமால் கிழக்கே சசி இடம், மேற்கே என்னுடையது, வடக்கே இளையபெருமாள் தேவர், தெற்கே சசி உழவு உள்ளது. மேற்படி எனது 2-1/2 ஏக்கர் இடத்திற்கு தனிப்பட்டா வாங்கியுள்ளேனா என்றால் இல்லை. எனது இடத்திற்கும், எனது தம்பி இடத்திற்கும் சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதால் என்றால் இல்லை.

எனது 2-1/2 இடத்திற்கு என்று தனியாக வரிசெலுத்தியுள்ளேனா என்றால் செலுத்தியுள்ளேன். தாவா வழக்கு தாக்கல் செய்யும் வரை வரிசெலுத்தியுள்ளேன். எனக்கோ, எனது சகோதரருக்கோ எனது தகப்பனார் தலா 2-1/2 ஏக்கர் பிரித்துக்கொடுக்கவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது தகப்பனார் எனக்கு 2-1/2 ஏக்கர் பிரித்துக்கொடுத்திருந்தால் நான் எனது பெயருக்கு தனிப்பட்டா வாங்கியிருப்பேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.14 28.01.2013ம் தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் எனக்கும், எனது தம்பிக்கும் ஆன கூட்டுப்பட்டா எண்.1685 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நானும், எனது தம்பியும் வழக்கு சொத்தான 5 ஏக்கர் 4 செண்ட் நிலத்தினை ஆங்காங்கே பலநபர்களுக்கு பிரித்து அடமானம் வைத்து பின்னர் அதை மீட்டுள்ளோம் என்றால் சரிதான்.

பி.வா.சா.ஆ.9ம் 27.07.2011ம் தேதியன்று எனது தம்பி எமராஜா ராமன் மகன் ராமன் என்பவருக்கு எனது சம்மதத்துடன் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி கிரைய பத்திரத்தில் நானும் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.9ம் ஆவணத்தில் நானோ, எனது தம்பியோ வழக்கு சொத்தை வாய்மொழியாக பிரித்துக்கொண்டதாக சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ.9 கிரைய பத்திரத்தில் உள்ள நான்குமால் கிரைய பத்திரத்திற்காக போடப்பட்டது என்றாலும், அது உண்மையான நான்குமால் இல்லை என்றாலும் சரியல்ல.

வா.சா.ஆ.12 ஆவணம் 10.04.2012ல் ராமன் மகன் ராமன் மற்றும் சொக்கனுக்கு 8 செண்ட் நிலத்தை எனது தம்பி எமராஜாவுக்கு தெரியாமல் விற்பனை செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது தம்பிக்கு தெரியும். பி.வா.சா.ஆ.15 கிரைய பத்திரத்தில் பூர்வீக சொத்து என்று மட்டுமே சொல்லியுள்ளேன் என்றாலும், நானும், எனது தம்பியும் வாய்மொழியாக பிரித்துக்கொண்டதாக சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு கூட்டுஉரிமையாளரான எனது தம்பிக்கு தெரியாமல் விற்றதால் மேற்படி கிரைய பத்திரமானது செல்லாது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.16 28.01.2013ம் தேதியில் எனது மனைவிக்கு 2 ஏக்கர் 33 செண்ட்டை தானம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி தானம்பத்திரம் ஏற்படுத்துவதற்கு எனது தம்பியிடம் அனுமதி வாங்கினேனா என்றால் அவரைக் கூப்பிட்டேன் அவர் வரவில்லை.

எனது மனைவிக்கு நான் எழுதிக் கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் எனது தகப்பனாரின் பூர்வீக சொத்து என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் பதியும் பொழுது எனது தம்பியிடம் அனுமதி வாங்காததால் அந்த ஆவணம் செல்லாது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பட்டாக்களுக்கும், வழக்கு சொத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. தாவாச் சொத்தில் உள்ள கிணற்றின் மின்இணைப்பு எனது அம்மா பெயரில் உள்ளது என்றால் சரிதான். நானும், எனது தம்பியும் வாய்மொழியாக பிரித்திருந்தால் மின்இணைப்பிற்கு எங்கள் இருவர் பெயருக்கும் மாற்றியிருப்போம் என்றால் சரியல்ல.

எனது தம்பி ஒத்தி வைத்ததாக சொல்லப்பட்ட ஆவணங்களில் நானும், எனது சகோதரரும் வாய்மொழியாக பிரித்துக்கொண்டதாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.10 06.01.1995ம் தேதியில் நான் வைத்த ஈடு பத்திரத்தில் பூர்வீக சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.11 கிரைய ஆவணத்தில் பூர்வீக சொத்து என்று மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ.11 ஆவணமானது எனது தம்பிக்கு தெரியாமல் ஏற்படுத்தப்பட்டது என்பதால் அந்த ஆவணம் செல்லாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தான 5 ஏக்கர் 4 செண்ட் நிலத்தினை நானும், எனது தம்பியும் தலா 2-1/2 ஏக்கர் செண்ட் விகிதமாக நான்குமால் வைத்து பொதுக்கிணறுடம் பாகப்பிரிவினை செய்யவில்லை என்றால் சரியல்ல. பாகப்பிரிவினை செய்யாததை மறைத்து நீதிமன்றத்தில் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**S.d./Selvam**
**Taken down be me in open court**
**Read over to the witness in the**
**presence of accused and admitted**
**by HIM correct.**
**/Sd.G.Sathiya Narayanan, B.A., B.L.,**
**District Munsif cum Judicial Magistrate No.I,**
**Usilampatti.**